1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சரணாலயப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காடுகளில் இப்படிப்பட்ட மிருகங்களை வேட்டையாடக்கூடாது என்று விதி வகுக்கப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவைகளில் காட்டுப்பன்றியும் ஒன்று. ஆனால் அப்படிப்பட்ட காட்டுப் பன்றிகள் பயிர்களை அழிக்க முன் வருமேயானால் அனுமதி பெற்று சுடலாம் என்றும் விதியிருக்கிறது. அப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்ததாக அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் ஜமீன்தார்களுடைய காலத்தில் அங்கே காடுகள் எல்லாம் இருந்து தற்போது அது அழிக்கப்பட்டு விட்ட தால் அங்கே இன்றைய தினம் காடுகள் குறைவாக உள்ளதால் அங்கே சரணாலயம் அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், அந்தக் காடுகள் எப்பொழுது சர்வே செய்யப்பட்டது? முன்னால் இருந்ததை விட இப்பொழுது குறைந்திருக்கிறதா? அப்படியென்றால் அதற் கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்றெல்லாம் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்களை சேகரித்து பதில் தருகிறேன்.

தஞ்சை மாவட்ட அரசுப் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகள்

*வினா எண், 766 திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணி, பட்டுக் கோட்டை, திருத்துறைப்பூண்டி, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி வகுப்புகள் நடத்த அனுமதியளிப்பதற்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 25,000 அளிக்கவேண்டுமென அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் புயலால் பாதிக்கப்பட்ட அப்பகுதிகளில் அரசே இவ்வகுப்புகளை துவக்க உத்தேசித்துள்ளதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம். தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த ரூ. 25,000 பொதுமக்கள் நன்கொடை கட்டாயம் கட்ட வேண்டும் என்ற பொது விதியுள்ளது.

[1979 ஏப்ரல் 21

(ஆ) புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு மேல் நிலை வகுப்பு துவங்க ரூ. 25,000 பொதுமக்கள் நிதி கட்டவேண்டிய அவசியமில்லை என்ற விதி விலக்களிக்கும் கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மானியம்

*வினா எண். 767 திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) +2 வகுப்புகள் நடத்தும் தனியார் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் அரசு மானியமாக அளிக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகை பள்ளிக்குப் பள்ளி மாறுபடுகின்றதா? அல்லது சம தொகையே எல்லாப் பள்ளிகளுக்கும் அளிக்கப்படுகிறதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் சம்பளத் தொகை முழுவதையும் போதனா மானியமாக ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படுகிறது.

(ஆ) தனியார் நிர்வாகத்தின் கீழுள்ள மேல்நிலை வகுப்புகளில் பணிபுரியும் நிர்ணயிக்கப் பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசு நிர்ணயித்துள்ள சம்பள விகிதத்தின்படி ஒவ்வொரு மாதமும் மானியம் வழங்கப்படுகிறது. அதனால் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மானியத் தொகையில் வித்தியாசம் ஏற்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் பிளஸ்—2 வகுப்புகளில் சேர்ந்திருக்கிற மாணவர்கள் ஃபர்ஸ்டு (முதல்) குரூப்பில், மேத்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி முதலியவைகளை எடுத்துக் கொள்ளப்படலாம் என்றுள்ளது. செகண்ட் குரூப்பில் மேத்ஸ் கிடையாது. ஆனால் பெற்றோர்களால் எங்களுக்குத் தரப்பட்ட தகவல்களின்படி வருகிற எம்.பி.பி. எஸ் தேர்வுக்கு மேத்ஸ் இருந்தால்தான் இடம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஃபர்ஸ்ட் குரூப்பில் இடமில்லாவிட்டால் செகன்ட் குரூப்பில் சேரும் மாணவர்களுக்கு மேத்ஸ் இல்லாமல் எம். பி.பி.எஸ்.சில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியத் தொகை இவ்வளவுதான் என்று அறிவித்துள்ளபடி அரசு தருகிறதா என்பதைப் பற்றியெல்லாம் கேளுங்கள். நீங்கள் ஏதோ சம்பந்தம் இல்லாமல்....